முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 710**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

08.09.2021, புதன்கிழமை

1. ஞானவான்கள் துணைகொண்ட அரங்கனே
   ஞானிகளின் சர்வசக்தி கொண்ட தேசிகனே
   தானதர்மம் பெருக்கி காக்கவே
   தரணியை ஞானவான்கள் படைபெருக்கி காக்க
2. காக்கவே அவதாரம் புரிந்த கலியுகத்தின்
   ஆறுமுகன் என் சூட்சுமமே
   தர்மனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தக்க ஞான அறிவுரை ஆசி தன்னை அருளுவேன்
3. கர்மவினை வென்று காத்தருள
   கலியுகத்தில் கந்தன் என் சக்தியாக வந்த அரங்கனே
   தர்மத்தை கொண்டு உலகோரை மாற்றி
   தயவான தன்னார்வ மக்கள் படைகளை உருவாக்கி
4. உருவாக்கி உலகத்தை காப்பேன் என
   உயர் சபதம் செய்து வாழுகின்ற
   குருவாக உள்ள அரங்கனே குருராஜனே
   குவலயத்தில் உந்தனுள் என் சக்தி பரிபூரணமாய் இருக்க
5. இருக்கவே முருகா என எங்கெல்லாம் கேட்கின்றதோ
   இயம்பிடுவேன் அந்த திக்கெல்லாம் அரங்கன் உன் கருணை உண்டாகி
   ஆதரவாய் மக்களிடை ஞானமும்
   அழியாமை என்கின்ற சக்தியும் பெருகி
6. பெருகியே பூதலம் பாதுகாப்புப் பெறும்
   பிரளயம் பேரிடர் அனுகாத மீட்புகண்டு
   குரு அரங்கன் உன் அருளாலும் தயவாலும்
   குவலயம் ஞானபலம் அடையக்கூடும்
7. ஞானபலம் பெருகி இனிதே இனிதே
   ஞானியர்கள் ஆட்சியாக மாறுதல் கண்டு
   தானதர்மவான் உந்தன் சக்தியாலே
   தரணியே ஞானசித்தர் ஆட்சிக்காலம் அடைந்து

8. அடைந்து அற்புதம் நிகழும் அரங்கன் உன் கருணையால் இந்த மாற்றம் பெறக்கூடும்
கூடவே உயர்தொண்டர் படைகளை குவலயம் எங்கும் நிரப்பி வரும்
சுடரெனும் ஞானபலம் கொண்ட அரங்கனே
சுத்த நெறிகாக்கும் தர்மனே

9. அரங்கனே உன்னால் கலியுகம் ஞானயுகம் ஆகும்
அரங்கனே உன்னால் ஞானஆட்சி மலரும்
வரம் தந்து ஆறுமுகன் உந்தனுக்கு
வல்லமைபட துணை நிற்கின்றேன் எல்லா சூழலிலும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–